# ஆண்டவருடைய பாடுகளின் வெள்ளி

தியானப்பாடல் : திருப்பாடல் 31: 2,6 12-13, 15-16, 17, 25

பல்லவி: தந்தையே உம் கையில் என் உயிரை ஒப்படைக்கின்றேன்

ஆண்டவரே உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்துள்ளேன்
ஒருநாளும் வெட்கம் அடைய விடாதேயும்
உமது நீதிக்கேற்ப என்னை விடுவித்தருளும்.
உமது கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்
வாக்கு பிறழாத இறைவனாகிய ஆண்டரே
நீர் என்னை மீட்டருளினிர்

என் பகைவர் அனைவரின் இகழ்ச்சிக்கு உள்ளானேன்
என்னை அடுத்திருப்போரின் பேரழிவுக்கு ஆளானேன்
என் அன்பர்களுக்கு பேரச்சம் வருவித்தேன்
என்னைத் தெருவில் பார்ப்போர் என்னிடமிருந்து விலகி ஒடுகின்றனர்
இறந்தோர் போல் நான் நினைவிலிருந்து அகற்றப்பட்டேன்
உடைந்து போன மட்கலம் போலானேன்

ஆண்டவரே நான் உம்மீது நம்பிக்கை வைத்துள்ளேன்
நீரே என் கடவுள் என்று சொன்னேன்
என் வாழ்வின் ஒவ்வொறு கட்டமும் உமது கையில் உள்ளது
என் எதிரிகளின் கையினின்றும் என்னைத்
துன்புறுத்துவோரின் கையினின்றும்
என்னை விடுவித்தருளும்

உமது முகத்தின் ஒளி அடியேன் மீது வீசும்படி செய்யும்

உமது பேரன்பால் என்னை விடுவித்தருளும்

ஆண்டவக்காக நம்பிக்கையுடன் காத்திருப்போரே

நீங்கள் அனைவரும் உள்ளத்தில்

வலிமையும் உறுதியும் கொண்டிருங்கள்

## திருச்சிலுவை வழிபாட்டின்போது பாடல்கள்

என் மக்கள் இனமே, நான் உனக்கு என்ன செய்தேன், சொல்;

எதிலே உனக்குத் துயர் தந்தேன்?

எனக்குப் பதில் நீ கூறிடுவாய்.

எகிப்து நாட்டிலிருந்து உன்னை மீட்டுக்கொண்டு வந்தேனே;

அதனாலோ உன் மீட்பருக்குச் சிலுவை மரத்தை நீ தயாரித்தாய்.

நாற்பது ஆண்டுகள் நான் உன்னைப் பாலைநிலத்தில் வழிநடத்தி

உனக்கு மன்னா உணவூட்டி வளமிகு நாட்டினுள் கொண்டுவந்தேனே:

அதனாலோ உன் மீட்பருக்குச் சிலுவை மரத்தை நீ தயாரித்தாய்.

உன்னை முன்னிட்டு நான் எகிப்தை அதன்

தலைச்சன் பிள்ளைகளோடு சாட்டையால் அடித்தேனே;

நீயோ என்னைச் சாட்டையால் வதைக்கக் கையளித்தாய்.

பாரவோனைச் செங்கடலில் ஆழ்த்தி, எகிப்தினின்று உன்னை விடுவித்தேன்;

நீயோ என்னைத் தலைமைக் குருக்களிடத்தில் கையளித்தாய்!

நானே உனக்கு முன்பாகக் கடலைத் திறந்தேன்;

நீயோ எனது விலாவை ஓர் ஈட்டியினால் திறந்தாயே!

மேகத் தூணில் உனக்குமுன் நான் சென்றேனே;

நீயோ பிலாத்தின் முற்றத்துக்கு என்னை இழுத்துச் சென்றாயே!

பாலைநிலத்தில் மன்னாவால் நான் உன்னை உண்பித்தேனே;

நீயோ என் கன்னத்தில் அறைந்து என்னைச் சாட்டையால் அடித்தாயே!

உன் தாகத்தைத் தணிக்க, நலம் தரும் நீரைப்

பாறையினின்று உனக்குத் தந்தேனே;

நீயோ கசப்பும் புளிப்பும் கலந்த பானத்தை எனக்குத் தந்தாயே!

கானான் அரசரை உனக்காக நான் அடித்து நொறுக்கினேனே;

நீயோ நாணல் தடி கொண்டு எனது தலையில் அடித்தாயே!

அரசர்க்கு உரிய செங்கோலை உனக்கு நான் தந்தேனே;

நீயோ என் தலைக்கு முள்முடியைத் தந்தாயே!

உன்னை மிகுந்த ஆற்றலோடு சிறந்த நிலைக்கு உயர்த்தினேனே;

நீயோ என்னைச் சிலுவையெனும் தூக்குமரத்தில் தொங்க வைத்தாயே!.

## நம்பிக்கை தரும் சிலுவையே

எல்: நம்பிக்கை தரும் சிலுவையே, நீ மரத்துள் சிறந்த மரமாவாய்;

உன்னைப் போன்று தழை, பூ, கனியை எந்தக் காவும் தந்திடுமோ?

இனிய சுமையை இனிய ஆணியால் இனிது தாங்கும் மரமே நீ!

பாடகர்கள்: மாட்சிமிக்க போரின் வெற்றி விருதை நாவே பாடுவாய்;

உலக மீட்பர் பலியாகி வென்ற வகையைக் கூறியே,

சிலுவை அடையாளத்தைப் புகழ்ந்து, வெற்றி முழக்கம் செய்திடுவாய்.

எல் : நம்பிக்கை தரும் சிலுவையே, நீ மரத்துள் சிறந்த மரமாவாய்;
உன்னைப் போன்று தழை, பூ, கனியை எந்தக் காவும் தந்திடுமோ?

பாடகர்கள்: தீமையான கனியைத் தின்று சாவிலே விழுந்த நம்
முதல் பெற்றோரின் குற்றத் தீங்கைக் கண்டு நொந்த இறைவனார்
மரத்தால் வந்த தீங்கை நீக்க மரத்தை அன்றே குறித்தனர்.

எல்: இனிய சுமையை இனிய ஆணியால் இனிது தாங்கும் மரமே நீ!

பாடகர்கள்: வஞ்சகன் செய் சூழ்ச்சி அனைத்தையும் சூழ்ச்சியால் மேற்கொள்ளவும்
பகைவன் செய்த கேட்டினின்று நன்மை விளையச் செய்யவும்
வேண்டுமென்று நமது மீட்பின் ஒழுங்கில் குறித்து இருந்தது.

எல்: நம்பிக்கை தரும் சிலுவையே, நீ மரத்துள் சிறந்த மரமாவாய்;
உன்னைப் போன்று தழை, பூ, கனியை எந்தக் காவும் தந்திடுமோ?

பாடகர்கள்: எனவே புனிதக் கால நிறைவில் இறைத்தந்தை மைந்தனை
விண்ணில் நின்று அனுப்பலானார்; அன்னை கன்னி வயிற்றினில்,
உடல் எடுத்துப் பிறந்தாரே மண்ணகத்தைப் படைத்தவர்.

எல்: இனிய சுமையை இனிய ஆணியால் இனிது தாங்கும் மரமே நீ!

பாடகர்கள்: இடுக்கமான தீவனத் தொட்டியிலே கிடந்து குழந்தை அழுகின்றார்;
அவரது உடலைத் துகிலில் பொதிந்து சுற்றிவைத்துக் கன்னித்தாய்,
அவர்தம் கையும் காலும் கச்சையாலே பிணைக்கின்றார்.

எல்: நம்பிக்கை தரும் சிலுவையே, நீ மரத்துள் சிறந்த மரமாவாய்;
உன்னைப் போன்று தழை, பூ, கனியை எந்தக் காவும் தந்திடுமோ?

பாடகர்கள்: முப்பதாண்டு முடிந்த பின்னர் உடலின் வாழ்வு நிறைவுற
மீட்பர் தாமாய் உளம் கனிந்து பாடுபடத் தம்மையளித்தார்;
சிலுவை மரத்தில் பலியாகிடவே செம்மறி உயர்த்தப்படலானார்.

எல்: இனிய சுமையை இனிய ஆணியால் இனிது தாங்கும் மரமே நீ!

பாடகர்கள்: கசந்த காடி அருந்திச் சோர்ந்து, முட்கள், ஈட்டி, ஆணிகள்
மென்மை உடலைத் துளைத்ததாலே செந்நீர் பெருகிப் பாயவே,
விண்ணும் மண்ணும், கடலும் உலகும் அதனால் தூய்மை ஆயின.

எல்: நம்பிக்கை தரும் சிலுவையே, நீ மரத்துள் சிறந்த மரமாவாய்;
உன்னைப் போன்று தழை, பூ, கனியை எந்தக் காவும் தந்திடுமோ?

பாடகர்கள்: வளர்ந்த மரமே, உன் கிளை தாழ்த்தி, விறைத்த உடலைத் தளர்த்துவாய்;
இயற்கை உனக்கு ஈந்த வைரம் இளகி, மென்மையாகி நீ
உயர்ந்த வானின் அரசர் உடலின் வருத்தம் தணித்துத் தாங்குவாய்.

எல்: இனிய சுமையை இனிய ஆணியால் இனிது தாங்கும் மரமே நீ!

பாடகர்கள்: மரமே, நீயே உலகின் விலையைத் தாங்கத் தகுதியாயினை
செம்மறியின் குருதி உன்மேல் பாய்ந்து தோய்ந்ததாதலால்
புயலில் தவிக்கும் உலகிற்கெல்லாம் புகலிடம் நீ, படகும் நீ!

எல்: நம்பிக்கை தரும் சிலுவையே, நீ மரத்துள் சிறந்த மரமாவாய்;
உன்னைப் போன்று தழை, பூ, கனியை எந்தக் காவும் தந்திடுமோ?

*இறுதி அடியை ஒருபோதும் விடலாகாது:*

தூய மூவொரு கடவுளுக்கு முடிவில்லா மாட்சியே!

தந்தையும் மகனும் தூய ஆவியாரும் சரிசமப் புகழ் பெறுகவே;

அவர்தம் அன்பின் அருளாலே நம்மைக் காத்து மீட்கின்றார். ஆமென்.